# Tnpsc Model Question Paper 13 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. ஆம்பிஆக்சஸின் கழிவு நீக்க மண்டலத்திலுள்ள நெப்ரிடியாக்களின் எண்ணிக்கை ----------- ஆகும்
(அ) 70 ஜோடிகள் (ஆ) 85 ஜோடிகள் **(இ) 90 ஜோடிகள்** (ஈ) 75 ஜோடிகள்

2. எந்த உயிரினத்தில் முதன் முதலில் பாலிடீன் குரோமோசோம்கள் கண்டறியப்பட்டது?
(அ) பழபூச்சி (ஆ) டிரோசோபைல **(இ) கைரோனாமஸ்** (ஈ) வீட்டு ஈ

3. ஒரு பாக்டீரியம் அதன் உணவு திரவத்தை நோக்கி ஈர்க்கப்படும் நிலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(அ) உறக்கநிலை (ஆ) செல்இறப்பு **(இ) வேதித் தூண்டல்** (ஈ) கலங்கல் தன்மை

4. சூரிய ஒளிச் சக்தியை ஏன் விரும்பப்படும் பசுமை சக்தியாக தேர்வு செய்கிறோம்?
(அ) புதுப்பிக்க இயலாதது (ஆ) எளிதில் கிடைக்காதது
**(இ) புதுப்பிக்ககூடியது** (ஈ) மாசு உண்டாக்குவது

5. ஆந்த்ரசைட் என்பது ஒரு ---------- நிலக்கரியாகும்
**(அ) உயர் தர** (ஆ) நடுத்தர (இ) குறைந்த தர (ஈ) மிகக் குறைந்த தர

6. கீழ்க்கண்டவற்றுள் எது வீரியம் குறைந்த அமிலம் மற்றும் வீரியம் குறைந்த கார உப்பு?
(அ) சோடியம் குளோரைடு (ஆ) அம்மோனியம் குளோரைடு
(இ) சோடியம் அசிட்டேட் **(ஈ) அம்மோனியம் அசிட்டேட்**

7. SI அலகு முறைமையின் படி ஆற்றலின் அலகு என்ன?
(அ) $Nm^{-1}$ (ஆ) $Nsm^{-1}$ **(இ) Nm** (ஈ) $Ns^{-1}m^{-1}$

8. இயந்திர அலைகள் கேட்கக்கூடிய வரம்பிற்குக் கீழே அதிர்வெண் கொண்டிருக்கும் போது இவ்வாறு அழைக்கப்படுகின்றன.
(அ) ஒலியியல் (சோனிக்) **(ஆ) தாழொலியல் (இன்பரா சோனிக்)**
(இ) மீயொலி (அல்ட்ரா சோனிக்) (ஈ) சூப்பர்சோனிக் (மீவேக ஒலி)

9. ஜனவரி 2022–ல் அறுவை சிகிச்சையாளர்களால் வெற்றிகரமாக, மரபு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் இதயத்தை மனிதனுக்குப் பொருத்திய நாடு
(அ) ஜெர்மனி (ஆ) இத்தாலி (இ) ஐக்கிய அரபு நாடு **(ஈ) அமெரிக்க ஐக்கிய நாடு**

10. தமிழக முதலமைச்சர் -------- நாளை "புலம்பெயர்ந்த உலகத்தமிழர் நாளாக"க் கொண்டாடப்படும் என்று அறிவித்துள்ளார்.
**(அ) ஜனவரி 12** (ஆ) ஜனவரி 7 (இ) மார்ச் 7 (ஈ) மார்ச் 12

11. தேசியத் தண்ணீர் ஆணையத்தின் "கேட்ச் தி ரெயின்" (மழையை பிடி) தொடங்கப்பட்ட நாள்
(அ) 22 பிப்ரவரி, 2021 **(ஆ) 22 மார்ச், 2021** (இ) 22 ஏப்ரல், 2021 (ஈ) 22 மே, 2021

12. UPSC நடத்தும் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் சிறுபான்மை மாணவர்களை முதன்மைத் தேர்வுக்கு தயார்படுத்துவதற்கு பின்வருவனற்றுள் எது உள்ளன?
**(அ) நய் உதான்** (ஆ) நய சவேரா (இ) நய் ரோசினி (ஈ) உஸ்தாத்

13. இந்திய விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் அமைந்துள்ள இடம்
(அ) அகமதாபாத் (ஆ) புனே (இ) பெங்களூரு **(ஈ) திருவனந்தபுரம்**

14. தேசியக் கொடியின் வடிவமைப்பை இந்திய அரசியல் நிர்ணயச் சபையால் ---------- அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது
(அ) 20 ஜீன் 1947 **(ஆ) 22 ஜீலை 1947** (இ) 21 ஆகஸ்டு 1947 (ஈ) 23 நவம்பர் 1947

15. 2021ம் ஆண்டின் 12வது தேதிய வாக்காளர் தினத்தையொட்டி ---------- மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரிக்குச் சிறந்த மாநில விருதினைத் தேர்தல் கமிஷன் வழங்கியது
**(அ) தமிழ்நாடு** (ஆ) அசாம் (இ) வங்காளம் (ஈ) புது தில்லி

16. கீழ்கண்ட முக்கிய இந்திய பழங்குடியினரை அவர்களின் அமைவிடத்துடன் பொருத்துக
அ. பில்கள் 1. ஒடிஷா
ஆ. போடோ 2. குஜராத்
இ. கோண்டா 3. ஜார்கண்ட்
ஈ. முண்டா 4. அஸ்ஸாம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 2 | 4 | 1 |
| ஆ. | 3 | 1 | 4 | 2 |
| **இ.** | **2** | **4** | **1** | **3** |
| ஈ. | 2 | 3 | 4 | 1 |

17. பின்வருவனவற்றில் உலகினிலே மிக அதிக பயணிகள் அடர்த்தி சேவை வழங்கிடும் இந்திய இரயில் பாதை எது?
**(அ) மும்பாய் புறநகர் இரயில்வே** (ஆ) கொல்கத்தா புறநகர் இரயில்வே
(இ) தில்லி புறநகர் இரயில்வே (ஈ) சென்னை புறநகர் இரயில்வே

18. மனிதனால் தூண்டப்படாத ஆபத்துக்கள் எது?
(அ) பௌதீக ஆபத்துக்கள் (ஆ) இரசாயண ஆபத்துக்கள்
(இ) உயிரியல் ஆபத்துக்கள் **(ஈ) கிரக ஆபத்துக்கள்**

19. மொத்த காவிரி ஆற்றின் நீளத்தில், எவ்வளவு சதவிகித நீளம் தமிழ்நாட்டில் உள்ளது?
(அ) 41.0% (ஆ) 46.0% **(இ) 56.0%** (ஈ) 51.0%

20. இந்தியாவில் எந்த ஆண்டில் இமாலய சுனாமி ஏற்பட்டது?
**(அ) 16 ஜீன் 2013** (ஆ) 6 ஆகஸ்டு 2013 (இ) 26 ஜீலை 2010 (ஈ) 16 ஜீலை 2013

21. நமது இந்திய அரசியலமைப்பின்படி மொழிகள் ---------- கீழ் வருகின்றது
**(இ) எட்டாவது அட்டவணை** (ஆ) ஏழாவது அட்டவணை
(இ) ஆறாவது அட்டவணை (ஈ) ஐந்தாவது அட்டவணை

22. சாம்பாவதி கல்யாணம் என்ற நூல் எந்த மொழியில் எழுதப்பட்டுள்ளது?
(அ) தெலுங்கு (ஆ) தமிழ் (இ) மராத்தி **(ஈ) சமஸ்கிருதம்**

23. இந்தியத் துணைக்கண்டம் தவிர எந்த நாட்டில் சமஸ்கிருத கல்வெட்டுகள் உள்ளன?
(அ) ஆப்கானிஸ்தான் (ஆ) பங்களாதேஷ் (இ) பாகிஸ்தான் **(ஈ) தென்கிழக்காசிய நாடுகள்**

24. பாமினி அரசில் குல்பார்க்காவில் இருந்து பீடாரருக்கு தலைநகரை மாற்றியவர் யார்?
**(அ) முதலம் அகமது ஷா** (ஆ) பாமன் ஷா
(இ) முதலாம் முகமது ஷா (ஈ) அலாவுதீன் மஜீகித் ஷா

25. தவறான இணை எது?
**(அ) ஷாஜகான் நாமா–ஷாஜகான்** (ஆ) துசுக்–ஐ–ஜஹாங்கிரி
(இ) துசுக்–ஐ–பபூரி–பாபர் (ஈ) ஹீமாயூன் நாமா–குல்பதன் பேகம்

26. 1664ஆம் ஆண்டு, சிவாஜியால் தாக்கப்பட்டதும் மற்றும் குறையாடப்பட்டதுமான மேற்கு கடற்கரை கோட்டை எது?
(அ) கோவா (ஆ) பேஸின் (இ) சௌல் **(ஈ) சூரத்**

27. கலிஃபாக்களிடமிருந்து தன்னைத்தானே விடுவித்துக்கொண்ட டெல்லி அரசர் யார்?
(அ) குத்புதின்–ஐபக் **(ஆ) இல்டுட்மிஷ்** (இ) பால்பன் (ஈ) இரஷ்யா பேகம்

28. சிந்துவெளி நாகரிகத்தின் முடிவிற்கு எது காரணமாக அமைந்தது?
(அ) வானியல் மாற்றம் **(ஆ) நில நடுக்கம்** (இ) வெள்ளம் (ஈ) படையெடுப்பு

29. பாராளுமன்றம் மற்றும் சட்ட சபையில் பெண்களுக்கான 33% இடஒதுக்கீட்டிற்கான மசோதா முதல் முதலில் எந்த பிரதம மந்திரியின் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது?
**(அ) தேவ கௌடா** (ஆ) ராஜீவ் காந்தி (இ) மன்மோகன் சிங் (ஈ) பி.வி.நரசிம்ம ராவ்

30. இந்தியாவில் முதல் முதலில் லோக் அயுக்தா அமைப்பினை உருவாக்கிய மாநிலம்
(அ) தமிழ்நாடு (ஆ) பீகார் **(இ) ஒரிஸா** (ஈ) ராஜஸ்தான்

31. உயர்நீதிமன்ற நீதிபதியின் ஓய்வுபெறும் வயது
(அ) 65 (ஆ) 67 **(இ) 62** (ஈ) 61

32. புன்சி கமிஷன் அமைக்கப்பட்டது?
**(அ) ஏப்ரல் 28, 2007** (ஆ) ஏப்ரல் 29, 2007 (இ) ஏப்ரல் 30, 2007 (ஈ) ஏப்ரல் 29, 2008

33. மாவட்ட கிராம மேம்பாட்டு முகமையின் தலைவர் யார்?
(அ) கடன் திட்ட அலுவலர் (ஆ) ஊரக தொழில் சாலைகள் அலுவலர்
**(இ) மாவட்ட ஆட்சியர்** (ஈ) கூடுதல் ஆட்சியர்

34. குடியரசு தலைவர், ராஜ்ய சபாவில் ---------- உறுப்பினர்களை நியமிக்கிறார்.
(அ) 10 உறுப்பினர்கள் **(ஆ) 12 உறுப்பினர்கள்**
(இ) 11 உறுப்பினர்கள் (ஈ) 9 உறுப்பினர்கள்

35. அடிப்படை கடமைகள் பற்றி பரிந்துரைக்க அமைக்கப்பட்ட குழுவினை குறிப்பிடுக:
(அ) ஷர்மா குழு (ஆ) சந்தானம் குழு **(இ) சுவரன் சிங் குழு** (ஈ) பல்வந்த்ராய் மேத்தா குழு

36. 1976ல. இந்திய அரசியலமைப்பின் முகப்புரையில் சேர்க்கப்பட்ட கூற்று யாது?
(அ) மதச்சார்பின்மை **(ஆ) சமதர்மம்** (இ) கம்யூனிஸம் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

37. தேசிய கிராமப்புற சுகாதார பணி தொடங்கப்பட்ட ஆண்டு
(அ) 2000 **(ஆ) 2005** (இ) 2010 (ஈ) 2015

38. பிரதம மந்திரி அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் அரசு மார்ச் 31, 2019–ல் 1 கோடி பேருக்கு வீட்டு வசதி கொடுக்க திட்டமிட்டிருந்தது ஆனால் அதே காலத்திற்குள் ----------- வீடுகள் வழங்கப்பட்டிருந்தது.
(அ) 1.05 கோடி வீடுகள் **(ஆ) 1.54 கோடி வீடுகள்**
(இ) 0.95 கோடி வீடுகள் (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

39. குத்தகைச் சட்டத்தின் முக்கிய அம்சம்/அம்சங்கள்:
1. ஒப்பந்த காலத்தை நிர்ணயித்தல்.
2. நியாயமான வாடகை.
3. நிலத்தை வாங்கும் உரிமை.
(அ) 1 மட்டும் (ஆ) 1 மற்றும் 3 மட்டும் (இ) 2 மற்றும் 3 மட்டும் **(ஈ) 1, 2 மற்றும் 3**

40. பட்டியல் I மற்றும் I ஐ பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான விடையை தேர்வு செய்க:

| பட்டியல் I | பட்டியல் I |
|---|---|
| அ. நான்காவது நிதிக்குழு | 1. ஏ.எம்.குஸ்ரூ |
| ஆ. எட்டாவது நிதிக்குழு | 2. பி.வி.ராஜமன்னார் |
| இ. பதினோராவது நிதிக்குழு | 3. ஒய்.பி.சவான் |

| | அ | ஆ | இ |
|---|---|---|---|
| **அ.** | **2** | **3** | **1** |
| ஆ. | 3 | 2 | 1 |
| இ. | 1 | 3 | 2 |
| ஈ. | 2 | 1 | 3 |

41. இந்திய ரிசர்வ் வங்கி, மகாத்மா காந்தி உருவம் பொறிக்கப்பட்ட 200 ரூபாய் காகிதப் பணத்தை ஆர்பிஐ கவர்னர் டாக்டர்.உர்ஜித் படேலின் கையொப்பத்துடன் ------------ அன்று வெளியிட்டது.

(அ) 25.08.2016 **(ஆ) 25.08.2017** (இ) 25.08.2018 (ஈ) 25.08.2019

42. பட்டியல் I மற்றும் பட்டியல் II-ஐ பொருத்தி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறியீடுகளை பயன்படுத்தி சரியான விடையை தேர்ந்தெடுக்க:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| அ. முதல் ஐந்தாண்டு திட்டம் | 1. தொழில்மயமாதல் |
| ஆ. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் | 2. தன்னிறைவு |
| இ. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம் | 3. வேளாண்மை |
| ஈ. ஆறாவது ஐந்தாண்டு திட்டம் | 4. வறுமை ஒழிப்பு |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 3 | 2 | 4 |
| ஆ. | 4 | 3 | 2 | 1 |
| **இ.** | **3** | **1** | **4** | **2** |
| ஈ. | 4 | 2 | 1 | 3 |

43. 2016-17ல் உலக பொருளாதாரத்தில் (GDP) இந்தியா பெற்றுள்ள இடம் ------------ ஆகும்.

(அ) நான்கு **(ஆ) ஏழாவது** (இ) ஐந்தாவது (ஈ) பத்தாவது

44. இந்திய மக்களுக்கு அதிகாரத்தை ஒப்படைக்க போகிறோம் என்ற தகவலை பொதுமக்கள் சபையில் அறிவித்தவர் யார்?

(அ) விக்டோரியா மகாராணி (ஆ) இரண்டாம் எலிஸபெத் மகாராணி
(இ) வைசிராய் லூயிஸ் மௌண்ட்பேட்டன் பிரபு **(ஈ) பிரதமர் அட்லி**

45. சட்ட மறுப்பு இயக்கம் காந்தியினால் ஒத்திவைப்பதற்கு காரணமாயிருந்தது ---------- ஆகும்

(அ) காந்தி-அம்பேத்கர் ஒப்பந்தம் **(ஆ) காந்தி-இர்வின் ஒப்பந்தம்**
(இ) காந்தி-வேவல் ஒப்பந்தம் (ஈ) காந்தி-மௌண்ட்பேட்டன் ஒப்பந்தம்

46. டிரியோ என சிறப்பாக அழைக்கப்பட்டவர்கள் யாவர்?

(அ) காந்தி, நேரு மற்றும் படேல் **(ஆ) லால், பால் மற்றும் ப்பால்**
(இ) காந்தி, நேரு மற்றும் தாகூர் (ஈ) நேரு, தாகூர் மற்றும் நேதாஜி

47. மாநில தன்னாட்சி என்பது ----------வின் பிரதான பரிந்துரையாக இருந்தது

(அ) காந்திஜி (ஆ) இராஜாஜி **(இ) கோகலே** (ஈ) பி.ஜி.திலக்

48. ஒடுக்கப்பட்ட மக்கள் தெளிவான பிரதிநிதித்துவத்தை உள்ளாட்சி தேர்தலில் பெற்றிடவும் மற்றும் பொது பணியில் தேர்வாகிட உதவிடுவதும் ---------- ஒப்பந்தமாகும்.

**(அ) பூனா** (ஆ) பம்பாய் (இ) கல்கத்தா (ஈ) அலகாபாத்

49. 1893ஆம் ஆண்டு சிகாகோ உலக சமய பாராளுமன்றத்தில் தியாசபியின் பிரதிநிதியாக கலந்து கொண்டவர் யார்?
**(அ) அன்னிபெசண்ட்** (ஆ) விவேகானந்தர் (இ) போதகர் பிராங் பெசன்ட் (ஈ) பால்வாட்ஸ்கி

50. கீழே கொடுக்கப்பட்டுள்ளதை பொருத்தி, கொடுக்கப்பட்ட குறியீடுகளிலிருந்து சரியான விடையை தேர்ந்தெடு:
அ. பிரிஜிஸ் காதர் 1. பைசாபாத்
ஆ. நானா சாகிப் 2. பீகார்
இ. குன்வார் சிங் 3. அவுத் நவாப்
ஈ. மேளலவி அகமத்துல்லா 4. கான்பூர்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 2 | 3 | 4 |
| **ஆ.** | **3** | **4** | **2** | **1** |
| இ. | 4 | 3 | 2 | 1 |
| ஈ. | 3 | 2 | 1 | 4 |

51. அறுபத்தி மூன்று நாயன்மார்களின் வாழ்க்கையை விவரிக்கும் நூல்
(அ) நாலாயிர பிரபந்தம் (ஆ) தேவாரம்
**(இ) பெரிய புராணம்** (ஈ) திருவிளையாடல் புராணம்

52. கரிகாலனுக்கு திருப்பு முனையாக இருந்த போர்
**(அ) வெண்ணி** (ஆ) மகதம் (இ) அவந்தி (ஈ) வஜ்ரா

53. இந்திய தேசிய காங்கிரஸின் இரண்டாவது பெண் தலைவர்
**(அ) சரோஜினி நாயுடு** (ஆ) அன்னிபெசன்ட் (இ) பார்வதி தேவி (ஈ) பத்மாசினி அம்மாள்

54. பல்லவர்களின் ஆந்திரர் தோற்றம் பற்றி ----------ஆல் கூறப்பட்டது.
**(அ) கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி** (ஆ) கே.பி.ஜெயஸ்வால்
(இ) கிருஷ்ணசாமி ஐயங்கார் (ஈ) சத்தியாநதய்யர்

55. ஈ.வே.ராமசாமி சுயமரியாதை மாநாட்டில் பெண்களின் நலனுக்காக திட்டங்கள் இயற்றப்பட்ட இடம்
(அ) மெட்ராஸ் (ஆ) கோயமுத்தூர் (இ) சேலம் **(ஈ) செங்கல்பட்டு**

56. "பட்டியரிசித்திட்டம்" யார் காலத்தில் கொண்டு வரப்பட்டது?
(அ) இராஜாஜி (ஆ) பகத்வத்சலம் (இ) காமராஜ் **(ஈ) சி.என்.அண்ணாதுரை**

57. நீதிக்கட்சியை உருவாக்கியர்
**(அ) டி.எம்.நாயர்** (ஆ) பி.சுப்பராயன் (இ) பி.எஸ்.குமாரசாமி ராஜா (ஈ) சி.சத்தியமூர்த்தி

58. மருது சகோதரர்களின் பிரகடனம் ---------- சுவரில் ஒட்டப்பட்டது?
**(அ) திருச்சிக் கோட்டை** (ஆ) சிவகங்கை கோட்டை
(இ) காளையார் கோவில் கோட்டை (ஈ) நெற்கட்டும் செவல் கோட்டை

59. காங்கிரஸின் மூன்றாவது மாநாடு நடைபெற்ற இடம் ------------- ஆகும்
(அ) பாம்பே **(ஆ) மெட்ராஸ்** (இ) கல்கத்தா (ஈ) டெல்லி

60. திருப்புறம்பியம் போரில் நேரடியாக பங்கு கொண்ட சோழ மன்னர்
(அ) விஜயாலய சோழன் **(ஆ) ஆதித்ய சோழன்**
(இ) பறாந்தக சோழன் (ஈ) ராஜேந்திர சோழன்

61. சீன பயணி யுவான் சுவாங் யாருடைய காலத்தில் காஞ்சிக்கு வருகை புரிந்தார்?

(அ) மகேந்திரவர்மன் **(ஆ) நரசிம்மவர்மன்** (இ) ராஜசிம்மன் (ஈ) அப்பராஜித்தன்

62. தனி ஆந்திர மாநிலம் கோரி உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தவர் ---------- ஆவார்.
**(அ) பொட்டி ஸ்ரீராமுலு** (ஆ) பொட்டி சுபராயலு (இ) டி-பிரகாசம் (ஈ) ஸ்ரீநிவாசலு

63. சங்க காலத்தில் ஆரிய படை கடந்த நெடுஞ்செழியன் இறந்த உடன் அவனுடைய மனைவி கோப்பெருந்தேவி உடனடியாக இறந்த சம்பவத்தை ---------- என அழைத்தனர்
(அ) மற கற்பு (ஆ) கற்பு (இ) சதி **(ஈ) அறகற்பு**

64. இந்தியர்களுக்கும் ரோமானியர்களுக்கும் வியாபார தொடர்பு இருந்தது என்று உறுதி கூறிய அரிக்கமேட்டில் கண்டுப்பிடிக்கப்பட்ட நாணயங்கள் ------------ காலத்தில் வெளியிடப்பட்டன.
(அ) கோபர்நிகஸ் (ஆ) ஜீலியஸ் **(இ) அகஸ்டஸ்** (ஈ) ஜஸ்டினியன்

65. மாநில சமூக நல ஆலோசனை குழுவின் முதல் பெண் தலைவராக நியமிக்கப்பட்டவர்
(அ) அன்னி பெசன்ட் **(ஆ) முத்துலெட்சுமி** (இ) கோவிந்தம்மாள் (ஈ) சுந்தராம்பாள்

66. "நடந்தாய் வாழி காவிரி" என்ற புதிய திட்டத்தின் நோக்கமானது
(அ) காவிரி ஆற்றின் வடிகாலில் தடுப்பணைகள் கட்டுதல்
**(ஆ) காவிரி ஆற்றை தூய்மைபடுத்தல்**
(இ) காவிரி ஆற்றை மாசுபடுத்துதல்
(ஈ) காவிரி ஆற்றை மற்ற நதிகளுடன் இணைத்தல்

67. (2009-10) தேசிய மாதிரி கணக்கெடுப்பின் 66-வது சுழற்ச்சியின்படி இந்தியாவில் மொத்த தொழிலாளர் சக்தியில் தமிழ்நாட்டின் பங்கு
(அ) 6.74 சதவீதம் **(ஆ) 7.74 சதவீதம்** (இ) 9.74 சதவீதம் (ஈ) 8.74 சதவீதம்

68. தமிழ்நாடு மனித மேம்பாட்டு அட்டவணை 2013-14ம் ஆண்டின்படி, முதல் வரிசை-ல் மனித மேம்பாட்டில் உள்ள மாவட்டம்
**(அ) கன்னியாகுமரி** (ஆ) தர்மபுரி (இ) சென்னை (ஈ) ராமநாதபுரம்

69. தமிழ்நாடு மனித மேம்பாட்டு அட்டவணை அறிக்கை 2014-15ஆம் ஆண்டின்படி, தமிழக மாநிலத்தில் பாலின சமத்துவமின்மை குறியீட்டில் முதன்மையாக விளங்கும் மாவட்டம்
(அ) ஈரோடு (ஆ) கரூர் **(இ) நீலகிரி** (ஈ) வேலூர்

70. 2018ம் ஆண்டில், தமிழ்நாட்டில் "ஸ்டெர்லைட்க்கு எதிரான போராட்டம்" நடைபெற்ற இடம்
(அ) தஞ்சாவூர் **(ஆ) தூத்துக்குடி** (இ) கன்னியாகுமாரி (ஈ) சேலம்

71. தமிழ்நாட்டில் மனிதனுக்கும், மிருகங்களுக்குமிடையே சச்சரவு இருக்க காரணமாவது
(அ) மிருகங்களை வேட்டையாடுதல் **(ஆ) பயிர் விளைச்சலை மிருகங்கள் சேதபடுத்தல்**
(இ) மிருகங்கள் சப்தம் எழுப்புதல் (ஈ) மிருகங்களிடையே சண்டை இருப்பதால்

72. "Kaavalan SOS" என்ற செயலியின் நோக்கம் ------------- ஆகும்
**(அ) ஆபத்து காலங்களில் மக்களின் இருப்பிடத்தை கண்டறிதல்**
(ஆ) வனத்தில் புலிகளின் நடமாடும் எண்ணிக்கையை அறிதல்
(இ) விபத்துகளை மதிப்பிடுதல்
(ஈ) சாலை விபத்துகளை மேலாண்மை செய்தல்

73. 2019-ல் தமிழ்நாட்டின் நல்ல ஆளுமை திறன் குறியீட்டின் அளவு என்ன?
(அ) 4.31 **(ஆ) 5.62** (இ) 7.50 (ஈ) 6.72

74. தமிழ்நாட்டில் அதிகமான மழை பொழிவு பெரும் காலம்

**(அ) அக்டோபரிலிருந்து டிசம்பர் வரை** (ஆ) ஜனவரியிலிருந்து மே வரை
(இ) ஜீன்–ல் இருந்து செப்டம்பர் வரை (ஈ) ஆகஸ்டு மாதம் மட்டும்

75. தமிழக அரசு வழங்கும் விலையில்லா கறவை மாடு பெற தகுதியானவர்கள் யார்?
**(அ) வறுமையிலும் வறுமையான குடும்பத் தலைவியாக உள்ள பெண்கள்**
(ஆ) நிலமற்ற விவசாயிகள்
(இ) நிலமற்ற விவசாய கூலிகள்
(ஈ) வறுமையிலும் வறுமையான குடும்பத்தலைவராக உள்ள ஆண்கள்

76. $1+2+3+\ldots+k = 55$ எனில் $1^3+2^3+3^3+\ldots k^3$ ன் மதிப்பு
**(அ) 3025** (ஆ) 3125 (இ) 166375 (ஈ) 171875

77. ஒரு A.P.ன் 16 மற்றும் 26வது உறுப்புகள் முறையே 65, 105 எனில் முதல் 36 உறுப்புகளின் கூடுதல்
(அ) 2000 (ஆ) 2500 (இ) 2600 **(ஈ) 2700**

78. 20, 21, 25, 34, 50,… ? 111 தொடர் வரிசையில் கேள்விக்குறிக்கு பதிலாக என்ன வரவேண்டும்?
**(அ) 75** (ஆ) 70 (இ) 65 (ஈ) 60

79. சீரான இரு பகடைகள் ஒரு முறை உருட்டபடுகிறது எனில் முதல் பகடையில் 3ன் மடங்கு எண் கிடைப்பதற்கான நிகழ்தகவு யாது?
**(அ) 1/3** (ஆ) 1/2 (இ) 1/6 (ஈ) 2/9

80. பின்வரும் தொடர்வரிசையில் அடுத்து வருவது என்ன? B, C, E, G, ––––
(அ) I (ஆ) J **(இ) J** (ஈ) H

81. A மற்றும் B இணைந்து 12 நாட்களில் ஒரு வேலையை செய்கின்றனர். B மட்டும் தனியாக 30 நாட்களில் அந்த வேலையை முடிக்க முடியும் எனில் A மட்டும் தனியாக அவ்வேலையை முடிக்க ஆகும் நாட்கள் காண்க
(அ) 15 நாட்கள் (ஆ) 18 நாட்கள் **(இ) 20 நாட்கள்** (ஈ) 25 நாட்கள்

82. 6 பெண்கள் அல்லது 8 ஆண்கள் ஓர் அறையை 86 நாட்களில் கட்டி முடிப்பர், அது போன்ற அறையை 7 பெண்கள் மற்றும் 5 ஆண்கள் கட்டி முடிக்க எத்தனை நாள்கள் ஆகும்?
(அ) 35 நாட்கள் **(ஆ) 48 நாட்கள்** (இ) 30 நாட்கள் (ஈ) 40 நாட்கள்

83. அரைக்கோளத்தின் வளைபரப்பு அதன் ஆரத்தின் வர்க்கத்திற்கு எத்தனை மடங்கு?
(அ) 3 π (ஆ) 4 π (இ) π **(ஈ) 2 π**

84. ஒரு நேர்வட்டக் கூம்பில் எத்தனை இடைக்கண்டங்கள் உள்ளன?
**(அ) எண்ணிலடங்கா** (ஆ) 3 (இ) 2 (ஈ) 1

85. 484 செ.மீ அடிச் சுற்றளவுள்ள ஒரு மரக்கூம்பின் உயரம் 105 செ.மீ எனில், கூம்பின் கன அளவைக் காண்க:
(அ) 652910 செ.மீ$^3$ **(ஆ) 652190 செ.மீ$^3$** (இ) 59290 செ.மீ$^3$ (ஈ) 59920 செ.மீ$^3$

86. ஒரு அரைக்கோளத்தின் மொத்த புறபரப்பு அதன் வளைபரப்பின் எத்தனை மடங்கு?
(அ) 2 (ஆ) 3 **(இ) 3/2** (ஈ) 2/3

87. ஒரு சமபக்க முக்கோணத்தின் சுற்றளவு 30 செ.மீ எனில் அதன் பரப்பு
(அ) $10\sqrt{3}$ ச.செ.மீ$^2$ (ஆ) $12\sqrt{3}$ ச.செ.மீ$^2$ (இ) $15\sqrt{3}$ ச.செ.மீ$^2$ **(ஈ) $25\sqrt{3}$ ச.செ.மீ$^2$**

88. ரூ.31, 250–க்கு ஆண்டுக்கு 16 என்ற வீதத்தில் 9 மாத காலாண்டின் கூட்டு வட்டி காண்க:
(அ) ரூ.3, 500 **(ஆ) ரூ.3, 902** (இ) ரூ.4, 000 (ஈ) ரூ.4, 200

89. ரூ.68, 000க்கு 9 மாதங்களில் வட்டி வீதம் 16 2/3% வீதம் கிடைக்கும் தனிவட்டி என்ன?
**(அ) ரூ.8, 500** (ஆ) ரூ.7, 500 (இ) ரூ.6, 500 (ஈ) ரூ.8, 000

90. 2x : y = 8 : 5 எனில் (3x + 3y) : (4x – 2y) ன் மதிப்பு யாது?
(அ) 6 : 2 (ஆ) 2 : 6 **(இ) 9 : 2** (ஈ) 2 : 9

91. இரு எண்களின் விகிதம் 3 : 4 மற்றும் அவைகளின் பெருக்கற்பலன் 432 எனில் பெரிய எண் எது?
(அ) 15 (ஆ) 20 **(இ) 24** (ஈ) 30

92. ஒரு வரைபடத்தின் அளவு 1 : 30000000 என வழங்கப்படுகிறது. வரைபடத்தில் இரு நகரங்களுக்கு இடையே உள்ள தொலைவு 4 செ.மீ எனில் உண்மையில் அவ்விரு நகரங்களுக்கு இடையே உள்ள தொலைவை காண்
(அ) 120 கி.மீ **(ஆ) 1, 200 கி.மீ** (இ) 12, 000 கி.மீ (ஈ) 520 கி.மீ

93. இரு எண்களின் பெருக்கற்பலன் 1320, மீ.பொ.வ. 6 எனில் மீ.சி.ம
**(அ) 220** (ஆ) 1314 (இ) 1326 (ஈ) 7920

94. 24, 15 மற்றும் 26 ஆல் வகுபடும் 6 இலக்க மிகப்பெரிய எண்
(அ) 999700 **(ஆ) 999720** (இ) 999780 (ஈ) 999999

95. ஒரு எண்ணின் மதிப்பை 25% குறைத்தால் 120 கிடைக்கிறது எனில் அந்த எண்ணைக் காண்க:
**(அ) 160** (ஆ) 120 (இ) 180 (ஈ) 150

96. இரண்டு தொடர் தள்ளுபடிகளான 20% மற்றும் 25% ஆகியவற்றிற்கு சமமான தள்ளுபடி சதவீதம்
**(அ) 40%** (ஆ) 5% (இ) 45% (ஈ) 22.5%

97. சுருக்குக: $[m^a/m^b]^{(a+b)}$ x $[m^b/m^c]^{(b+c)}$ x $[m^c/m^a]^{(c+a)}$ x 1/m
**(அ) 1/m** (ஆ) m (இ) 1 (ஈ) $m^{(a+b+c)}$

98. ஒருவரின் வருமானம் 10% அதிகரிக்கிறது. பின்பு 10% குறைகிறது எனில் அவரது வருமானத்தில் என்ன மாற்றம் நிகழும்?
(அ) 1 அதிகரிக்கும் **(ஆ) 1 குறையும்** (இ) எந்த மாற்றமுமில்லை (ஈ) 10 அதிகரிக்கும்

99. ஒரு கடைக்காரர் ஒவ்வொன்றும் ரூ.10 என 200 பல்புகளை வாங்கினார். அவற்றில் 5 பல்புகள் பழுது என்று கண்டறியப்பட்டு, தூக்கி எறியப்பட்டது. மீதியை ஒவ்வொன்றும் ரூ.12க்கு விற்றால், அவர் பெற்ற லாப அல்லது நஷ்ட சதவீதத்தைக் காண்க:
(அ) நஷ்டம் 14.53% (ஆ) இலாபம் 15.43% **(இ) இலாபம் 17%** (ஈ) நஷ்டம் 18%

100. a=3 1/2 , b = 5 3/4 , c = 4 3/5, d = 4 3/8 எனில் ab/cd ன் மதிப்பு யாது?
(அ) 0 **(ஆ) 1** (இ) 12 (ஈ) 2